## 2019 - 2020 தமிழ்த்துறை செயல்பாடுகள்

### அகராதியியல் கருத்தரங்கம்

தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மற்றும் தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி தமிழ்த்துறையும் இணைந்து அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் 13.09.2019 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரை கருத்தரங்க அறையில் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆர். இளவரசி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் த. அறவாழி அவர்கள் தலைமையுரையாற்றினார். செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் தங்க. காமராசு அவர்கள் விளக்கவுரை நிகழ்த்தினார். மேலும் சிறந்த கலைச்சொற்கள் உருவாக்கிய மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பரிசும் வழங்கினார். மீனவத் தொழிற் கலைச் சொற்கள் எனும் தலைப்பில் முனைவர் நா. சாந்தகுமாரி தமிழரசன் உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை பூம்புகார் கல்லூரி அவர்களும், அயலகத் தமிழ்க் கலைச் சொற்கள் எனும் தலைப்பில் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் பேராசிரியர் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் அவர்களும் கருப்பொருளுரை வழங்கினார். திரு. நா. செ. இளமுருகுப் பொற்செல்வன் அமைப்பாளர் திருக்குறள் பேரவை அவர்கள் சிறப்பு அமைப்பாளராக அழைக்கப் பெற்றார். நிகழ்ச்சிக்கான நன்றியுரையை அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் பதிப்பாசிரியர் முனைவர் மா. பூங்குன்றன் அவர்கள் வழங்கினார்

### தமிழ் மன்றக் கருத்தரங்கம்

தருமபுரம் ஞானாம்பிகை அர்சினர் மகளிர் கலைக் கல்லூரி தமிழ்த்துறையில் 10.10.2019 அன்று கருத்தரங்கக் கூட்டம் நடைபெற்றது. அதில் முதுகலை மன்றங்களின் சார்பாக மணல்மேடு அரசு கலைக் கல்லூரி, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ. கார்முகிலன் அவர்கள் இயங்குத் தளத்தின் இயக்கம் இலக்கியங்கள் என்ற தலைப்பிலும், இளங்கலை சார்பாக தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ப. முருகன் அவர்கள் இலக்கியங்கள் பார்வையில் மகளிர் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள். அவ்வமயம் அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள் மாணாக்கியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க விழா இனிதே நிறைவுற்றது.

### சரஸ்வதி பாலகிருஷ்ணன் சுழற்கேடயப் பேச்சுப்போட்டி

தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறையில் 03.01.2020 அன்று சரஸ்வதி பாலகிருஷ்ணன் சுழற்கேடய பேச்சுப் போட்டி உணவுக் கலாச்சாரம் ஆரோக்கியமானது ஆம்/இல்லை என்பதாகும் என்ற தலைப்பில்